# ஆத்ம ஜோதி



உரும்பராய் கருணாகரப்பிள்ளையார்
கோவில்.



# ஆத்ம ஜோதி

[ ஓர் ஆத்மீக மாத வெளியீடு ]

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.—சுத்தானந்தர்


ஜோதி 13 | பிலவ ௵ சித்திரை ௴ 1-ந் உ (13 4-61) | சுடர் 6


## பொருளடக்கம்


1 கருணைகர விநாயகர் — 161
2 காவடிச்சிந்து 162
3 உரும்பராய்............பிள்ளையார் 163
4 சுத்தானந்தரின் கடிதங்கள் 165
5 மகாத்மாவின் மணிக்குரல் 169
6 பராசக்தியே பரிந்தெனைப்பார் 172
7 கோழைகள் அல்ல 173
8 நம்மவர் குறிக்கோளும் கடமையும் 178
9 திருமுறைக் காட்சி 183
10 சுவாமி அபேதானந்த.......... சம்பாஷணை 187
11 யார் செயல் 192


## ஆத்மஜோதி சந்தா விபரம்


ஆயுள் சந்தா ரூ. 75-00 வருடச் சந்தா ரூ. 3-00

தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்:- க. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்:- நா. முத்தையா

" ஆத்ம ஜோதி நிலையம் " நாவலப்பிட்டி. [சிலோன்]


## கருணைகர விநாயகர் - கலிவெண்பா

( க. வேலுப்பிள்ளை )

பொன்கதிரைத் தன்கதியைப் பூவிலொரு பாற்பரப்ப
வெங்கதிரி ஞுதவனும் வெட்கமுறீஇ - அம்புவியில்
ஈழ தேசமென வெண்ணிவான் புக்கவந்தக்
காரணத்தா லீழமெனக் கண்டபதி - மேலோர்
சிரமாம்வீ ணுபுரமன் றிலத மெனக்கால்
பதியா முரும்பைப் பரத்தைப் - புலமேல்
கருணைகரக்கற் பகக்கன்ருய் வந்த
குருவை யடியனையாட் கொள்ளுந் - திருவேதார்க்
கோனே மருமானே கோவிந்தன் பூமினுக்குத்
தேனேநா னுன்பதியைத் தேடிவந்து - நானடையுந்
துன்பத்தை யோதிச் சுகம்பெறநீ காணுமல்
இங்கொளித்தால் நீதியென்று யார் சொல்வார் - வஞ்சக்
குணம்மாய முங்களுக்குக் கோத்திரத்துக் குள்ள
குணமென்ற துண்மையென்று கொள்ளத் - தடையேது
பெற்ற பிள்ளை கண்ணீர் பெருகவழு தங்குமிங்குஞ்
சுற்றியையா ஐயா எனச் சோப - முற்றுக்
கதறி யழைக்கவவர் கண்ணெதிரே யோடி
அணையாத வன்கணுடை யாராய் - மறையுமன்னை
தந்தையெங்கு முண்டோ தயாபரமே நீ மறைந்தால்
இங்குநா ஞுறுவது யார்க்குரைத்தோ - என்கருணை
வள்ளல்நீ யுன்னரிய மைந்தன்நா னென்பதைநீ
அல்லவென்று சொல்லிவிட ஆகுமோ - பிள்ளையென்முன்
வந்துகுறை கேட்டு வழங்கவரு ளென்னதடை
எந்தவிதந் தள்ளிவிட எண்ணினும்நீ - எந்தையுனை
நானே விடேனேழை நானேசுவது முன்னை
நான்திட்டி வைவதும்பின் நானழுதென் - நாதா
எனவிருகை கூப்பிக்கும் பிட்டேத் துவது
மெதிஞு னெய்துமிட ராலென் - றறிவாய்நீ
பின்னைநான் விட்டுப் பிரிவதெவ்வா றிம்பரென் கண்
முன்னேவா மூஷிகமேற் கொண்டுகுறை - என்னே
எனக்கேளென் மேலே யிரங்கென் பிழையைப்
பொறுத்தாள் பரத்தைப் புலத்தைங் - கரத்துப்
பெருமானே பேழை வயிற்ருனே யேரம்ப
கருணைகரக் கடவுளே.

## காவடிச் சிந்து

( க. வே. )

கந்தனுக்கு முன்பு வந்த சுந்தர கருணாகரேச
கற்பகக் கன்றே யெனைக் கண் பாரையா - உனைநான்
காண வென்முன் வந்து கிருபை - கூரையா

பாலர் முதியோரெனப் பல்லோர் மடவாராடவர்தம்
பாடுசொல்லி ஆற வரமோனமேன் - எம்
பதியெனு முனக்கிதவ - மானமேன்

என்துயரைச் சொல்லியழ ஒன்றிரண்டோ என்னிலுன்
னிரக்கமில்லை யென்கிலென்ன செய்குவேன் - ஏழை
எப்படி நானிப்படியி - லுய்குவேன்

தொட்ட வண்டமாயிரத்து எட்டையு மரசு செய்த
சூரனல்ல நானோரேழையே யையா - உனது
சோதனையிதைப் பொறுப்பெ - னோதய்யா

பூர்வகர்ம போகமெனி னானுனைப் பணிவதைப்
போக்கவென நீ யறியவில்லையோ - இல்லைப்
போவெனி லுனக் கதிழி - பல்லவோ

அடிப்பது முன்கையெனை யணைப்பது முன்கையெனை
யடியனறிவேன் கிருபை கூரையா - இதோ
அன்புவைத் தெனது முகம் - பாரையா

ஐந்தெழுத்தை யோதவறியே னரகராவென
அறைய வறியேன்கதியெற் கென்னையா - அறி
வற்ற நாயென் னோடுனக்குச் - சன்னையா

பேசாத வார்த்தைக்கு நீ எசமான்; பேசின வார்த்தை உனக்கு எசமான்.

- பழமொழி

உறுதியைப்போல உழைப்பும் இருந்தால் நீ வெற்றி காணுவாய்.

- ஷெல்லி



## உரும்பராய் பரத்தைப் புலக் கருணாகரப் பிள்ளையார்

( ஆசிரியர் )

மக்கள் வணங்கும் மூர்த்தங்களுள்ளே பிள்ளையார் மிக இலகுவாகக் கிடைக்கக் கூடியவர். ஊருக்கொரு கோயில் என்பது போய் மரத்திற்கொரு பிள்ளையார் என்றால் அது மிகைப்படுத்திச் சொல்வதன்று. அவர் ஞான சொரூபர்; முக்கண்ணர்; சிவபிரானின் மூத்த குமாரர்; அவருடைய ஏகப் பிரதிநிதி.

பிள்ளையார் இருக்கிற இடத்திற்கேற்ப அவ்விடப் பெயரையே தமக்கு ஆக்கிக் கொண்டு விடுவார். அத்தியடிப் பிள்ளையார், ஆலடிப் பிள்ளையார், முரிகண்டிப் பிள்ளையார், தில்லையம்பலப் பிள்ளையார், மாணிக்கப் பிள்ளையார் என இப்படி ஆயிரக் கணக்கான உதாரணங்களைக் கூறலாம்.

யாழ்ப்பாணம், வன்னிநாடுவரை நீண்டகாலம் தமிழ் அரசர்களால் ஆளப்பெற்று வந்தது. விசய கூளங்கைச்சக்கரவர்த்தி காலத்திலே பல கோயில்கள் கட்டப்பெற்றன. அவற்றுள் உரும்பராய் பரத்தைப் புலக் கருணாகரப் பிள்ளையார் கோயிலும் ஒன்றாகும். இக்கோயில் சரித்திரப் பழமை வாய்ந்ததென்பது முன்னோருடைய ஐதிகமாகும்.

பலவித மரங்களடர்ந்த ஒருசோலை. அச் சோலையின் நடுவே ஒரு அரசமரம். அது மரங்களுக்கெல்லாம் அரசுபோல் உயர்ந்து பருத்து அகன்று நின்றது. அம்மரத்தின் கீழே வெண்கல்லாலானஒரு பிள்ளையார் திரு உருவம் இருந்தது. அத்திருஉரு தோன்றியகாலமோ அன்றித் தோன்றிய விதமோ எவர்க்குந் தெரியாது. வழிப்போக்கர்களும் உரும்பராய்க் கிராம வாசிகளும் மிகப் பக்தி சிரத்தையோடு வணங்கி வந்தனர். அவ்வழியே ஒருநாள் சென்ற விசய கூளங்கைச்

சக்கரவர்த்தியும் அப்பிள்ளையாரைப் பூசிக்கும் பேறு பெற்றார். தன் கோரிக்கை நிறைவேறினால் பிள்ளையாருக்கு ஒரு ஆலயம் அமைப்பதாகச் சக்கரவர்த்தி நேர்த்திக் கடன் செய்தார்.

பிள்ளையாரின் கருணையினால் சக்கரவர்த்தியின் கோரிக்கை அநுகூலமாய் முடிந்தது. உடனே சக்கரவர்த்தி செங்கற்களால் ஒரு சிறு ஆலயத்தைக் கட்டுவித்தார். அக்கட்டடம் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலே இடிக்கப் பெற்றது. சிறிது காலத்தின் பின்னர் கருணாகரர் எனப் பெயரிய அந்தணரொருவர் குழைமண் கொண்டு கோயிலைப் புதுப்பித்தார். அந்தணர் தம் பெயரை முன்னிட்டுக் "கருணாகரப் பிள்ளையார்" எனப் பெயர் வைத்தார் என்பது கர்ண பரம்பரைக்கதையாகும்.

கருணாகரருடைய வழித்தோன்றலாய் வந்தவர் சபாபதி ஐயராகும். அவர் இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தவர். அவர் பூஜை செய்த காலத்திலே உரும்பராயில் தில்லையர் வேலாயுதர் என்னும் ஓர் அன்பர் வாழ்ந்து வந்தார். அவர் மண்கட்டிடத்தைச் சாந்துக் கட்டிடமாக மாற்றினார். அத்துடன் நாளாந்தப் பூஜையும் கிரமமாக நடைபெற ஒழுங்குகள் செய்தார்.

சபாபதிஐயரின் மகன் பரமஐயர். அவருடைய புத்திரன் அப்புக்குட்டி ஐயர். அப்புக்குட்டி ஐயரின் முயற்சியினால் மகாமண்டபம், நிருத்த மண்டபம், தம்பமண்டபம், ஆதியன நிறைவேறின. அக்காலந் தொட்டு நித்திய நைமித்தியங்கள் சிறப்புற நடந்து வருகின்றன. விசேட காலங்களில் அலங்கார விழாவும், கந்தபுராணப் படிப்பும் செவ்வனே நடைபெற்று வந்தன. ஆனால் கொடித்தம்பம் நாட்டி துவஜாரோகணம், அவரோகணம், இரதோற்சவம், தீர்த்தோற்சவம் என்பன நடத்தப்படவில்லை.

இதன்பின் 1910 ஆம் வருடம் ஆவணி மீ 26 ஆம் திகதி உரும்பராய்ப் பிரபல வைத்தியராகிய வயிரவநாதர் வல்லிபுரம் என்பவர் தம் செலவில் ஓர் கொடித்தம்பத்தைச் செய்வித்துக் கொடுத்து ஒரு விழாவையுமேற்று நடப்பித்து வந்தார். அன்றுமுதல் ஆவணிச் சட்டியில் கொடியேற்று விழா ஆரம்பமாகி விழாக் கொண்டாடப்பட்டு வருகிறது.



# சுத்தானந்தரின் கடிதங்கள் 9

தலைமை ஆசிரியர், காட்டுப்புத்தூர்

அன்புமிக்க நண்பருக்கு, என் மனச்சாட்சி சொல்லுகிறபடியே, நான் நடக்க வேண்டியருக்கிறது. ஆங்கிலத்தில் என் ராஜீனாமாவை ஏற்றருள்க என்று ஒரு மாதத் தவணை கொடுத்துவிட்டேன். அது தோரணைக்காக அனுப்பியது; இக்கடிதம் விதரணைக்காக வருகிறது. தங்களை நான் தந்தைபோலக் கருதி அபிமானித்தேன். தாங்களும் என்னிடம் மிகவும் பிரியமாகயிருந்து, எனது போதனாமுறைகளைக் கண்டு மகிழ்ந்தீர்கள், நம்மிருவருக்கும் எவ்வித மனத்தாங்கலும் இல்லை. ஆனால் இருவருக்கும் மேலேயுள்ள கடவுள் எனக்குப் புதியவழி காட்டியிருக்கிறார். அதன் தூதனாக, மனச்சாட்சி என்னை விடுதலை பெறத் தூண்டுகிறது. நான் செல்லுமுன் தங்களிடம் தனதாகச் சில செய்திகளைச் சொல்லநினைத்ததுண்டு; நேரமில்லையாதலால் அவற்றை எழுதியனுப்பலானேன்:

[1] மகாத்மாவை, தேசாபிமானம் உள்ள மாணவருடனும், இவ்வூர் இந்து முஸ்லீம் நண்பர்களுடனும் நான் கட்டளை ஸ்டேசஷனிலும் பிறகு திருச்சியிலும் தரிசித்ததுமுதல், அவரது சத்திய வாழ்வில் எனக்குப் பெருமதிப்பு உண்டாயிற்று. தியாகமும், அயராப் பொதுநலமும், தருமலட்சியமும் கொண்ட அவர், நமதுநாட்டிற்குப் புதியவழி காட்டியிருக்கிறார். ஆயுதமில்லாது பலமிழந்த அடிமைநாட்டிற்கு, அவர் சொல்லும் சத்தியாக்கிரகமே உய்யும் வழி என்று எனக்குத் தோன்றுகிறது. அவ்வழியை ஒரு கருமயோக சாதனமாகவே நான் பின்பற்றத் துணிகிறேன்.

[2] அத்தகைய மகானின் கட்டளைப்படியே நான், கதர் ஆடை உண்டாக்கல், மது, சீதனத்தை ஒழித்தல், இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு உழைத்தல், தேசியக்கல்வியைப் பரப்பல், தீண்டாமை விலக்கல் ஆகிய ஐங்கடமை பூண்டேன்.

என்னிடம் அன்புடைய மாணவருக்கும் இக்கடமைகளையே உணர்த்தினேன். சர்க்கார் பள்ளிக்கூடத்திலிருந்து இப்படி நான் செய்யத் துணிந்தது உங்களுக்கெல்லாம் வருத்தமாக யிருந்ததை யுணர்ந்தேன். எனினும், என்ன வந்தாலும் இந்த ஐங்கடமையை தேசத்திற்காகவே காக்க வேண்டியிருக்கிறது. வேலையிலிருந்துகொண்டு தாராளமாக நான் என் மனச்சாட்சியைத் திருப்தி செய்ய முடியவில்லையாதலால், என் பொறுப்பிலேயே விடுதலை பெற்று தேசவூழியம் செய்யத் துணிந்துள்ளேன்.

[3] தற்காலக் கல்வி முறையில் குறையிருப்பதை ஆசிரியர் சங்கத்தில் நாமெல்லாரும் பன்முறை பேசினோம். எஸ். ஸ்ரீநிவாசையங்கார் தலைமையில் நடந்த நமது ஜில்லா ஆசிரியர் சங்கத்திலும் நான் விரிவாகக் கல்விச் சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசினேன். அவர் ஆமோதித்தார். இக் கல்விமுறையில் யாருக்கும் திருப்தி யில்லை. இதைக் 'கஞ்சிப்படிப்பு, கஞ்சிக்கு மாரடிப்பு' என்று அழுத்தமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. இதில் தியாகபுத்தி கிடையாது. பணத்திற்கு ஐந்து மணி நேரம் புத்தகத்தில் உள்ளதைக் கிளிப்பிள்ளைக்குப் பாடஞ் சொல்லுவதுபோலச் சொல்லுகிறோம். மாணவரும் நாலு காசு சம்பாதித்துக் குடும்பம் பிழைக்கவே இக்கல்வியைக் கற்கிறார்கள்; பெற்றோரும் அதையே நாடுகிறார்கள்; படித்தவர்களும் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். பள்ளிக்கூடத்தில் புகுந்துபார்த்தாலோ, உபாத்தியாயருள் ஒற்றுமை யில்லை. ஆசிரியர் மாணவருக்கு உதாரணமாக நடக்க வில்லை. மாணவர் ஒழுக்கம் வளர இங்கே இடமே யில்லை. ஆசிரியர்கள் காலத்திற் கேற்ற புதிய புதிய அறிவை வளர்க்காமல், பழைய மாமூலிலேயே பிடிவாதம் செய்து, பிரம்பும் பாடப்புத்தகமுமாகப் பிழைப்பைத் தள்ளுகிறார்கள். தேசத்திற்கும் மாணவருக்கும் சம்பந்தமே யில்லாதிருக்கிறது.

[4] ஆசிரியர் சங்கம் பெயருக்குக் கூட்டம் போட்டு, வாய்ச்சிலம்பம் அடித்துச் செல்வதைத் தவிர வேறு புண்ணியமில்லை. பாடபுத்தகங்கள் வைப்பதிற்கூட லஞ்சமும் தாண்டவமாடுகின்றன.



[5] சுதந்தரமாக மாணவரை வெளியே அழைத்துச் சென்று காலத்திற் கேற்ற கல்வி யளிக்க நான் முனைந்தேன்; அவர்களுக்கு நூற்றல், நெசவு முதலிய சில தொழில்களில் பயிற்சி யுண்டாக்க முயன்றேன். 'நமது தேசம் நம் உரிமை; அதற்காக நாம் இவ்வழியில் தொண்டு செய்ய வேண்டும். நாமெல்லாரும் இந்தியர்; ஒரே குலத்தவர். சாதிமத வேறுபாடுகள் மனிதரின் மனமயக்கம். எல்லாரும் ஒற்றுமையாக இருந்தால் நமக்கு அசாத்தியமான பலம் உண்டாகும். பிறகு எளிதாகச் சுதந்தரம் பெறலாம். அதற்காகத் திலகர், காந்தி, லாலாஜி போன்ற மகான்கள் இப்படித் தியாகம் செய்கிறார்கள். என்று விளக்கினேன்; தேச உணர்ச்சி மிக்க பத்திரிகைகளைப் படிக்கச் செய்தேன். இவையெல்லாம் எனக்குப் பல பிரதிவாதிகளையே உண்டுபண்ணின; எல்லாம் காலத்தின் வினையைத் தவிர வேறில்லை.

[6] பழய அத்யாத்ம ஞானமும், இக்காலம் பெருமை கொண்ட விஞ்ஞானக் கலைகளும் சேர்ந்த பிரமசரியக் குருகுலக் கல்விதான் நமது நாட்டிற்கு கதிமோட்சம் என்று எனக்குத் தோன்றுகிறது. அக்கல்வி முறையில் ஆசிரியரும் யோக சாதனங்கள் செய்து, மாணவரும் சாதகர்களாக பிரமசரியம் காத்து ஞானத்தவம் செய்ய வேண்டும். முதலில் தமிழ் ஆரியம், பிறகு ஆங்கிலம் ஹிந்தி ஆகிய மொழிகளைக் கற்று, வெறும் பாஷாஞானம் மட்டுமின்றி அரிய கலைகளைத் தேர்ந்து, கல்வியுந் தொழிலும் ஒழுக்கமும் தார்மீகவுணர்வும் வீரதீர பராக்ரமமுங்கூறிய நிபுணர்களை உண்டாக்கக் கூடிய குருகுலக்கல்வியே கல்வியென ஆராய்ச்சியால் அறிகிறேன். அடுத்த கிராமத்தில் அப்படி ஒருகலாநிலயம் நாட்ட முயன்றது உண்டு; காலவினை அதைத் தடுத்தது.

ஆதலால் அத்தகைய குருகுலம் தமிழ்நாட்டில் அமைந்து எனக்கும் அழைப்பு வருமட்டும், நான் யோகசாதனங்களைச் செய்துகொண்டும், சிறந்த கவிதைகளையும் இலக்கியங்களையும் சிருஷ்டித்துக்கொண்டும் அடக்கமாகத் தவம் புரிய விரும்புகிறேன்.

சிலர் என்னைப் பத்திரிகை நடத்தச் சொல்லுகிறார்கள். நல்ல வழி பிறந்தால்; பேனாவை அத்துறையில் நாட்ட என்றும் தயாரா யிருப்பேன். எல்லாம் இனி என்னை உள்ளிருந்து நடத்தும் அந்தர்குருவான இறைவன் செய்கை. முதலில் விடுதலை பெறவே அவன் தூண்டுகிறான்; அவன் விட்ட வழியில் கீதையைக் கையிலேந்திச் செல்கிறேன்; வேறுவழி தோன்றவில்லை. சர்வாந்தர்யாமியான அவன் என்னை இனி நடத்தட்டும். மாணவரும் ஆசிரியரும் எனக்குச் செய்த மரியாதைகளையும் பேசிய புகழுரைகளையும் என் உயிர்த்தலைவனான பரமாத்மனுக்கே அர்ப்பணிக்கிறேன்.

நண்பரே, தங்களால் நான் எவ்வளவோ பயன் பெற்றேன். காட்டுப்புத்தூர் எனக்குப் புதிய வாழ்வளித்தது. மேலே நான் சொல்லிய குறைகளையெல்லாம் பொதுக்கருத்திற் கொள்ள வேண்டும். காட்டுப்புத்தூருக்கும் ஜமீன் பள்ளிக்கூடத்திற்கும் நான் என்றென்றும் நன்றியுள்ளவனாக இருப்பேன். இந்தப் பள்ளிக்கூடத்தில் நான் ஆசிரியனாக மட்டுமன்று — ஒவ்வொருநாளும் புதிய புதிய கலைஞானத்தை வளர்த்த — மாணவனாகவும் இருந்தேன். இந்த நிலயத்திலிருக்கும் ஆராய்ச்சிச்சாலை, எனது ஜீவரசாயன சாலையாகஇருந்தது.

எல்லாருக்கும் மனமார்ந்த நன்றி செலுத்தி, எல்லாவுயிர்களையும் திருமேனியாகக் கொண்ட இறைவன் விட்ட வழியே செல்லுகிறேன். வழியும் அவனே, விழியும் அவனே! ஓம், ஓம், ஓம்!

அன்பு

**சுத்தானந்தன்.**

நாம் பணக்காரர்களாக இருக்கக் கடமைப் பட்டில்லை; ஆனால் ஒழுக்க முள்ளவர்களாக இருக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

—பெர்னார்ட்ஷா



# மகாத்மாவின் மணிக்குரல்

### அன்பு

அன்பே உயிரினத்தின் ஆணிவேர்; அஃதின்றி
மன்புவியுண் டென்னல் வசை! 21

சாதி, மத,வகுப்பு, தாழ்வு உயர்வுமனப்
பேதம் கடந்ததன்புப் பேறு! 22

ஆசியா பாரிற் களித்தஉப தேசமெலாம்,
மாசற்ற அன்பு,சத்ய மாம்! 23

சத்தியம் அன்பகிம்சை தன்னை முரசடித்து,
எத்திசையும் இன்பவிளக் கேற்று 24

### அடக்கம்

வானுலகில் தேவரென்பார் இல்லை; மனவடக்க
மானிடமே தேவ மரபு! 25

மனத்தால் விலங்காக வாழ்வோன், சுயேச்சை
மனிதனெனல் முற்றும் வழு! 26

உளறுகின்ற நாவதனை உள்ளடக்கிப் பேசுபவன்,
அளவிறந்த பேச்சாள னாம்! 27

### தீண்டாமை

ஆண்டவன் முன்பு அனைத்துயிரும் ஒன்றேயாம்;
வேண்டாம்தீண் டாமை வெறி! 28

கற்கோயில் தம்மைவிட மாந்தர்தம் கட்டுடலே,
அற்புதநற் தேவா லயம்! 29

தீண்டாமைப் பேய்முற்றும் தீய்ந்தொழியா விட்டாலே
மாண்டொழியும் இந்து மதம்! 30

மனித குலத்திற்கே மாறாப் பகைவன்,
அநியாயத் தீண்டாமையாம்! 31

மாசுடையா ரேயெனினும்,மாதேவன் சந்நிதியில்
தேசுடையா ராவார் தெளி! 32

### ஆண்மை

உயிர்கொடுக்க நேர்ந்திடினும், உண்மை பிறழாத்
தயிரியமே ஆண்மையென்ப தாம்! 33

அச்சமுளார்க் கில்லை அகிம்சையும் சத்தியமும்
நிச்சயம்நல் லாண்மைக்கே தேர்! 34

ஆசையே அச்சத்திற் காதாரம்; அஃதொழிந்தால்
தேசுற்ற அஞ்சாமை நேர்! 35

அஞ்சாமை யென்ப தகந்தையல: நெஞ்சத்திற்
கொஞ்சமும் அச்சமிலாக் கூறு! 36

கன்னத் தறைந்தார்க்குக் கழுத்தையும் ஈந்துவப்பேன்
என்னினும் யார்க்குமஞ் சேன்! 37

### அச்சம்

பயமே கொடிய பகைப்பிணி; மாந்தர்க்(கு)
அயலிற் பகையில்லை யாம்! 38

பயமெனும் பேய்க்குப் பணிந்துலகில் வாழலினும்
உயிர்விடுதல் சால உயர்வு! 39

பிணியால் மடிவரினும் பெரும்பயத்தாற் சாவோர்
அனியாயமாய் மிகுதி யாம். 40

கோழைத் தனத்தைவிடக் கொடிய பலாத்காரம்
சாலச் சிறந்ததெனச் சாற்று! 41

மனிதர்க் கொருமரணம்; மாறுத கோழைக்குத்
தினமும் மரணமெனத் தேர்! 42

### ஆரோக்கியம்

ஆரோக்ய நல்வழியை அலட்சியம் செய்திடுதல்
கோர மிடியிற் கொடிது! 43

### எண்ணம்

மண்ணுக்குத் தக்க வளமுண்டாம்; மாந்தர்தம்
எண்ணத்திற் கேற்றவாழ் வே! 44



பழிக்குப் பழிநினைவு பாம்பின் கொடியவிடம்;
அழிவே அதனிறுதி யாம்; 45

### கைராட்டு

கைராட் டளிக்கும் கனித்த இசையமுதே,
மெய்சோர்ந்தார்க் கூட்டுமின்ப வீறு 46
நூற்பும் கதருடுப்பும். நூல்கற்றல் போலென்றும்
ஏற்க மாணுக்கர் இசைந்து! 47

### தொண்டு

சமுதாயத் தேவை, அதன் தன்மை, தனையுணர்ந்த
அமைதியாய் நற்பணிகள் ஆற்று! 48
அன்பு வழியால் அடைந்த சுதந்திரத்தை.
அன்பாலே காப்ப தறிவு! 49
அந்தரங்க சுத்தியுடன் ஆற்றும் பணிமறைதல்
எந்தக் காலத்தும் இல்லை! 50
சிறுபான்மை மக்களுயிர் காக்குந் திறனின்றேல்,
இறப்பேன்யான் அம்முயற்சி யில்! 51

— பரம ஹம்ச தாசன்.

---

'உள்ளத்தனையது உயர்வு'

## தமிழ்மறைக் கழகம்.

(முகவரி: 58, 31ஆம் ஒழுங்கை, கொழும்பு 6.)

உலகெங்குமுள்ள தமிழர்களுக்கு வேண்டுகோள்.

* வைகாசி அனுடம் வள்ளுவர் திருநாள். சென்ற ஆண்டுகளிற்போல இவ்வாண்டும் ஒவ்வொரு வீட்டிலுங் கொண்டாடுக. இவ்வாண்டுத் திருவள்ளுவர் திருநாள் மேத்திங்கள் முப்பதாந் தேதி (30-5-61) செவ்வாய்.
* திருவள்ளுவர் தொடர் ஆண்டினை வழங்குக.
* திருவள்ளுவரின் ஈராயிரம் ஆண்டு நிறைவு விழாவை 1969இல் வைகாசித் திங்கள் முழுவதுங் கொண்டாட இப்பொழுதே திட்டங்கள் வகுத்து ஆவன செய்க.
* தி. ஆ. 2000 முடியவுள்ள திருவள்ளுவர் திருநாள்களைக் கீழே காண்க.

தி. ஆ. 1993 — (கி. பி. 1962) மே 20 — ஞாயிறு
,, 1994 — ( ,, 1963) யூன். 6 — வியாழன்
,, 1995 — ( ,, 1964) மே. 26 — செவ்வாய்
,, 1996 — ( ,, 1965) யூன். 12 — சனி
,, 1997 — ( ,, 1966) யூன். 2 — வியாழன்
,, 1998 — ( ,, 1967) மே. 23 — செவ்வாய்
,, 1999 — ( ,, 1968) யூன். 9 — ஞாயிறு
,, 2000 — ( ,, 1969) மே. 31 — சனி

தி. ஆ. 1992, தை 9, கா. பொ. இரத்தினம். (தலைவர்)

உ

# பராசக்தியே பரிந்தெனையாள்

( சங்கீதபூஷணம் அ. கி. ஏரம்பமூர்த்தி )

இராகம் :- சங்கராபரணம் ஆரோகணம்;- ஸரிகமபதநிஸ் } 29வது
தாளம்;- ரூபகம் அவரோகணம்:- ஸ்நிதபமகரிஸ } மேள கர்த்தா

பல்லவி

பரா சக்தி யே பரிந் தெனையாள்
பரனிடப் பாகத் தமரும் தேவியே

அநுபல்லவி

சரா சரங்கள் அனைத் தையு மீன்று
சந்த தம் காத்திடும் தாயே கிருபாகரி
( பராசக்தியே )

சரணங்கள்

கயமுகனெடு கந்தனின் தாய் நீயே
கானத்திலாடிடும் காளியும் நீதானே
துயர் அனைத்தையும் தீர்த்திடுவாய் தாயே
தூய நவசக்தியாய் வருவாய் நீயே
( பராசக்தியே )

சிங்கத் தமர்ந்து சூலத்தினைக் கையேந்தி
சினங் கொண்டு மகுடனைச் சங்கரித்தாய்
திங்களணி சிவனுடன் நடம் செய்தாய்
தினம் பணிந்திட்டேன் தருணமிதுவே
( பராசக்தியே )

சுந்தரி சூலினி மீனாட்சி காமாட்சி
சங்கரி சாம்பவி நீலமால் சோதரி
வந்தெனை யாதரி மாயா வினோதினி
வரமருள் கௌரி கல்யாணி ஓங்காரி
( பராசக்தியே )

# கோழைகள் அல்ல, சிங்கங்களாவீர் !

## சமுதாயத் தலைமையை ஏற்க பெண்களுக்கு வேண்டுகோள்

உலகில் பிரச்சினைகள் பல நாளுக்கு நாள் சிக்கலாகி வருவதை உணர்கிறேன். நேபாளத்தில் மக்கள் சபையைக் கலைத்துவிட்டு அரசன் ஆட்சியைத் தானே ஏற்றுக் கொண்டான்; பாகிஸ்தானிலும் ஒரே மனிதரின் அதிகாரம் நடந்து வருகிறது. இவ்வாறு எகிப்திலிருந்து நேபாளம் வரையில் எல்லா நாடுகளிலுமே தனிமனிதர்கள் ஆட்சி நடத்துவதைப் பார்க்கிறோம். ஒரே மனிதன் அதிகாரம் செலுத்துவதென்றால் அது ராணுவத்தைக்கொண்டு நடத்துவதாய்த் தானிருக்கும். இந்தப் போக்கு, உலகத்தில் கடந்த 200 ஆண்டுகளாக எவ்வளவோ முயற்சியின்மேல் அமைந்த ஜனநாயக ஏற்பாட்டிற்கு

## வினோபா அடிகள்.

நேர்மாறானது. உலகம் தனிநபரின் ஆட்சிக்கு உட்படத்தொடங்கிவிட்டதை இது எடுத்துக் காட்டுகிறது. இது நம்மைச் சுற்றிலும் நடைபெறும் நிகழ்ச்சி. இங்கு அந்நிலைமை தோன்றாதபடி நாம் செய்யவேண்டும். இதற்குக் காரணமான குறைகளை அகற்றிச் சீர்திருத்தியாக வேண்டும். பெரிய குறை ஒன்று இன்று உள்ளது. ஆண்களில் பெரும்பாலோர் பழைய வரலாற்றில் மூழ்கி மிதந்து கொண்டிருப்பதால் பழைய முறையிலேயே சிந்தித்து வருகிறார்கள்; வேறுவகையில் சிந்திக்க முடியவில்லை.

இதனால் தீரவேண்டிய சிக்கல்கள் நாளுக்கு நாள் மேலும் சிக்கலாகின்றன. இந்த நிலைமையை மாற்றுவதற்கு நாம் புதிய முறையை, புதிய சக்தியை இதில் புகுத்த வேண்டும்.

இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள புதிய சக்தி சர்வோதய சக்திதான். அது தலையிட்டால் எல்லாச் சிக்கல்களும் தீர்ந்துவிடும். ஆனால் சர்வோதய சக்தி புகுந்து செயல்படு

வதற்கு அரசியலில் இறங்கிக் கெட்டுப்போகாத ஆன்மா வேண்டும். நான் இதுபற்றி யோசிக்கும் பொழுதெல்லாம் எனக்கு நம் சகோதரிகளின் நினைவுதான் வருகிறது. அவர்கள் தான் இதுவரை அரசியலில் உழன்று அறிவைக்கெடுத்துக் கொள்ளாமலிருக்கிறார்கள். எனவே பெண்கள் முயன்றால் எவ்வளவோ சச்சரவுகளைத் தீர்த்து வைக்கமுடியும். இதுவரை பொதுவாழ்வில் இறங்காமல் வீட்டிலேயே இருந்து வந்துள்ள பெண்கள் இப்பொழுது வெளியே வந்து ஏற்ற முறையில் பணியாற்றினால் எத்தனையோ பிரச்சினைகள் எளிதில் தீர்ந்து விடும்.

## துப்பாக்கி எடுக்கவேண்டாம்!

பெண்களைப் பொதுப்பணியில் ஈடுபடுத்த இதுவரை முயற்சி நடைபெறவில்லை என்பதல்ல; ஆனால் அவையெல்லாம் பெண்களும் ஆண்களைப் போலவே வேலை செய்யுமாறு செய்யப்பட்ட முயற்சிகளாகும். அவர்களிடம் "தேர்தலில் கலந்து கொள்ளுங்கள், "ரைட் லெஃப்ட்' என்று கவாத்துச் செய்யுங்கள், குறிவைத்துச் சுடப்பழகுங்கள்'' என்று சொல்லி அவர்களையும் சிப்பாய்களாக்க முயற்சி செய்யப் படுகிறது. இவ்வாறு ஆண்களைப்போல பெண்களும் துப்பாக்கி தாங்கி, கவாத்துப்பழகி தாங்கள் முன்னேறி வருவதாக எண்ணிக் கொள்ளுவதைப் போன்ற மடமை வேறில்லை.

இதனால் அவர்கள் முன்னேற்ற மெதுவும் எய்தமுடியாது. ஏனெனில் அவர்களுக்கில்லாத பல தடைகள் அவர்களுக்கு பிறவியிலேயே ஏற்பட்டுள்ளன. எனவே பலாத்கார வழியென்றால் அதில் ஆண்களால்தான் முன்னே நிற்க முடியும்; பெண்களால் முடியாது. ஆனால் அகிம்சா மார்க்கத்திலோ பெண்களுக்கு ஈடுகொடுக்க ஆண்களால் முடியவே முடியாது. அகிம்சா மார்க்கம் பெண்களுக்கே உரியது. அகிம்சை வழியில், அன்பு வழியில், கருணை வழியில் செல்லுவதற்கென்றே பிறந்தவர்கள் அவர்கள்.



## சிக்கல் தீரும்வழி

பாபு லோக சேவகர் சங்கம் அமைக்க வேண்டுமென்று சொன்னார். இப்பொழுது பெண்கள் முன்வந்து, "நாங்கள் காந்தியடிகள் சொன்னபடி லோக சேவகர் சங்கம் அமைக்கப் போகிறோம். ஆண்கள் செய்யத் தவறியதை நாங்கள் நிறைவேற்றப் போகிறோம்'' என்று சொல்லுவார்களானால் சமூகத்தில் அவர்களுக்கு மிக்க மதிப்பு ஏற்படும்; வரவிருக்கும் பொதுத் தேர்தலின் தன்மையே அதனால் மாறிவிடும். சாந்தி சைனிக்குகளாக எந்தக் கட்சியிலும் சேராமல் தனித்து இருந்து கொண்ட சமுதாயத் தலைமையை ஏற்பதற்குப் பெண்கள் முன்வருவார்களானால் இன்றைய சிக்கல்களில் பல தாமே தீர்ந்துவிடும்.

## ஊமையர் ஆக வேண்டாம்!

சாந்தி வித்தியாலயத்தில் அளிக்கும் கல்வியில் சாந்தி சேனைக்குத் தேவையான எல்லாவிஷயங்களும் போதிக்கப் படவேண்டும்.

உலகத்தில் எங்கெங்கே அமைதி இயக்கம் இதுவரை நடந்திருக்கிறது, யார் யார் நடத்தியிருக்கிறார்கள் என்பது பற்றி எடுத்துரைக்க வேண்டும். அதோடுகூட இன்னொரு விஷயமும் இங்கே பயிற்சியில் இடம் பெறவேண்டும். அதாவது, பெண்கள் நல்ல பேச்சாளர்களாக ஆகப்பழக வேண்டும்.

பெண்களுக்கு அதிகப் பேச்சுக் கூடாது, வாய் திறக்காமல் வேலை செய்து கொண்டு போவதுதான் அவர்களுக்கு அழகு என்று சொல்வதுண்டு. ஆனால் பேசவேண்டிய சமயத்தில் மௌனமாய் இருத்தல் தவறு. கடவுள் நமக்கருளியுள்ள இந்த சக்தியை நாம் பயன்படுத்த வேண்டும். பெண்கள் சொல்லின் செல்வர்களாய், நாற்றிசையும் சென்று சிங்கம் போல கர்ஜிப்பவர்களாய் ஆக வேண்டும். அக்கர்ஜனையில் அவர்களது தூய நடத்தை வெளியாக வேண்டும். உண்மை அறிவின் ஒளி வீசவேண்டும்.

சாந்திசேனைப் பயிற்சி பெறுவோர் ஒருவரை யொருவர் நன்கு அறிந்து கொண்டு வேற்றுமை யுணர்ச்சியின்றி, நெருங்கிப்பழக வேண்டும். பெண்கள் கோழைகள், அதட்டினால் நடுங்கிப் போகிறார்கள் என்று சொல்லுவதற்கே இடமிருக்கக் கூடாது. அவர்கள் எங்கு போனாலும் நல்ல ஆற்றலுள்ளவர்கள் என்ற பெயர் எடுக்க வேண்டும். சொற்றிறத்தோடு அறிவாற்றலுள்ளவர் களாகவும் அவர்கள் ஆக வேண்டும். அவர்கள் செய்யும் காரியங்களெல்லாம் சாந்தி சேனைக்கு உதவுபவையாய் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

## ''தலைவர்''களின் உபதேசம்

நிர்மாணப்பணி புரிவோர் அதிகம் பேசக்கூடாது, வேலை செய்வதிலேயே கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இவ்வாறு சொல்லுபவர்கள் யார்? ஓயாமல் பேசிக்கொண்டு' உருப்படியாக வேலை எதுவும் செய்யாமல் சமூகத்தில் குழப்பம் விளைவிப்பவர்கள்தான். அவர்கள் நிர்மாணவேலை செய்வோரிடம், ''நீங்கள் வாயைத் திறக்கக் கூடாது'' என்று உபதேசம் செய்கிறார்கள். இந்தப் புத்தியில்லாத நிர்மாண ஊழியர்களும் தலைவர்கள், தலைவர்கள் என்று அவர்களைக் கொண்டு திறப்புவிழாக்கள் நடத்தவும், அவர்களது ஆசி தங்களுக்கு இருந்தால் போதும் என்று எண்ணி மகிழவும் செய்கிறார்கள். இந்தத் தலைவர்கள் பிறரை வாய் திறக்கக்கூடாது என்று சொல்லுவதற்குக் காரணம் தங்களுக்குப் போட்டி இருக்கக்கூடாது என்ற எண்ணம்தான். இந்த உபதேசம் ஒருவேளை ஆண்களுக்குப் பொருந்தினாலும் பெண்களுக்குப் பொருந்தவே பொருந்தாது. பெண்கள் சமுதாயத்தில் தமக்குரிய இடத்தை அடைந்தாக வேண்டும். அதற்குத் தங்கள் ஆற்றல் முழுவதையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

## உமாதேவிகள் ஆவீர்!

சரஸ்வதி தேவி யார்? அவர் பெண்தானே, ஆணல்லவே? சரஸ்வதிதான் எல்லோரையும் நல்ல காரியங்கள் செய்யுமாறு



ஏவுகிறாளாம்; எல்லோருக்கும் நல்லறிவைப் புகட்டுபவள் அவள்தானாம். கல்விக்கு, சொல்லுக்குத் தேவதை சரஸ்வதியே. எனவே அந்த சரஸ்வதியினிட மிருந்து அதிகாரம் பெற்றுவந்துள்ள பெண்கள் வாய்திறக்கக் கூடாது. நிமிர்ந்து பார்க்கக் கூடாது, முகத்தைமூடிக்கொள்ள வேண்டும், கைகால்களில் விலங்குகள் பூணவேண்டும் என்பதெல்லாம் அர்த்தமற்றவை. அந்த விலங்குகள் தங்க விலங்குகளாயிருப்பதால் அதன் பளு உறைக்கா விட்டாலும் அவை விலங்குகளே என்பதில் சந்தேகமென்ன? அவற்றின் பளு அதிகமாக ஆக அதற்குச் சிறப்பு அதிகம் என்று கருதப்படுவதை என்னென்பது?

ஞானத்திலும் விஞ்ஞானத்திலும் பெண்கள் முன்னணியில் நிற்க வேண்டும் என்பது என் ஆவல். கல்வியில் அவர்களுக்கு எவ்விதமான குறைபாடும் இருக்கக் கூடாது. நான் ஆண்களிடம், ''நீங்கள் செயலில் ஈடுபடுங்கள், விவசாயம் செய்யுங்கள், மாடுகளோடு சேர்ந்து பாடுபடுங்கள், ஆனால் நீங்களும் மாடுகளாகிவிடாதீர்கள்!'' என்று சொல்லுவேன். ஆனால் பெண்களோ கல்வி முழுவதையும் அடைய வேண்டும். வேதத்தில் சொல்லியிருக்கிறது, அக்கினியும் இந்திரனும் தவம் புரிந்தார்களாம். ஆனால் அவர்களுக்கு பிரம்மன் காட்சியளிக்க மறுத்து விட்டாராம். அப்பொழுது அவர்களிடம் கருணை கொண்ட உமா தேவி அவர்கள் முன்வந்து ஆன்மஞானம் அளித்தாளாம். இதைப்போன்று உலகத்தாருக்கு ஆன்மஞானம் நல்கக் கூடிய உமாதேவிகள் இப்பொழுது தோன்ற வேண்டும்.

— கிராமராஜ்யம் —

கொடியர் சிலரின் நியமனத்திற்குப் பதிலாக தகுதியற்ற பலர், சிலரைத் தேர்ந்தெடுப்பது என்பதை ஜனநாயகம் ஒரு மாற்றாகக் கொடுத்திருக்கிறது.

- பெர்னார்ட்ஷா

# நம்மவர் குறிக்கோளும் கடமையும்

( கு. கி. நாராயணன். )

‘வாசா மகோசர’மாகவும், ‘அனீர்வசனீயமா’கவும், ’ஏகமேவ அத்விதியம் பிரம்ம’மாகவும் விளங்கும் அந்த சர்வேச்வரனது படைப்புக்கள்பலவற்றிலும் மிக உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்று விளங்குவதாகக் கருதப்படுவது மனித இனம். ஏனெனில் இது நல்லது இது தீயது, இது ஏற்கப்படவேண்டியது இது தவிர்த்தொதுக்கப்பட வேண்டியது, இதை ஏற்றுக் கொண்டால் நன்மை பயக்கும், இதை ஏற்றால் தின்மை விளையும் என்றிவ்வாறாகப் பகுத்தறியும் பான்மையை இறையருளினால் பெற்று விளங்குவதாலேயே ஜீவராசிகளெல்லாவற்றிலும் தலைசிறந்து விளங்குகின்றான் மனிதன். இவ்வாறாக எண்ணுகின்ற வேளையிலே இறைவன் மனித சிருஷ்டியில் ஏதோ ஓர் இரகசியத்தை மறைத்து வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் அடிமனதில் எழுகிறது. மனித இனம் சிரேஷ்டமானதே. ஆம். ஆனால் எப்பொழுது அவன் சிரேஷ்ட பதவியை எய்துகின்றான்? தனது வாழ்க்கையின் குறிக்கோளைத் தன் நினைவில் எப்பொழுதும் இருத்தியவனாய், நெறி பிறழாது, தன் கடமையினின்றும் வழுவாது அப் பரமபதத்தை நோக்கிச் செல்ல முயலும் போதே அவன் உண்மை மனிதனாகிறான். அந் நிலையை அடையும் வரை ‘மனிதரிலும் கல்லுண்டு மரமுண்டு......என்ற செய்யுளுக் கேற்ப கீழ் நிலையிலேயே இருக்கிறான்.

நிற்க, இனி இம் மாண்புமிக்க மனிதனின் குறிக்கோள் எது? அவனது கடமை எது? என்பது பற்றி ஆராய்வோம்.

விலையுயர்ந்த பொருளொன்றை வீட்டினுள் தொலைத்து விட்டான் ஒருவன். ஆனால் வீட்டிற்குள்ளோ வெளிச்சம் இல்லை. வீட்டிற்கு வெளியேயோ பால் போன்ற நிலவு உலகைப் பிரகாசப் படுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே அம் மூடமனிதன் வீட்டினுள் தொலைத்த பொருளை, வெளிச்சமிருக்கும் காரணத்தால் வெளியே வந்து தேடித் தேடிக் காணமுடியாமல் அரற்றினானும். இந்நிலையிலேயே தற்பொழுதைய மனிதன் இருக்கிறான். இன்பம் -உண்மை இன்பம் உள்ளே மறைந்து கிடக்க, அநித்யமான வெளி உலகப் பொருள்களின் பின் சென்று இன்பத்தை நாடுகிறான்; தேடுகிறான். கடைசியில் கண்டு கொள்ள இயலாமல் தத்தளிக்கிறான்.

இம் மானிட வாழ்வை அடைதல் பெறற்கரிய பேறுகளில் ஒன்றாகும். ஏனெனில் இப் பிறப்பில் தான் கர்மங்களின் காரணமாக மறுமையில் அவனது நிலை நிர்ணயிக்கப் படுகிறது. ஆகவே இப் பெறற்கரிய பிறப்பில் நற்செய்கைகளைச் செய்வானேயாகில் நன் நிலையை அடைகிறான்; தீய கருமங்களைச் செய்வதன் மூலம் தீய நிலையை அடைகின்றான்.

சாஸ்திரங்களின் வாயிலாகத் தன் கடமையை அறிந்து கொள்ள ஒருவன் முயல வேண்டும். அவ்வாறு சாஸ்திரங்கள் மூலம் அறிந்து கொள்வது கடினமாகத் தோன்றுமேயானால், அவைகளையெல்லாம் கற்றுணர்ந்த ஞானிகளிடம் சென்று பயின்று கொள்ள வேண்டும். இப்பேர்ப்பட்ட ஞானிகள் கிடைப்பது அரிதாயிருக்குமேயாகில் தர்மத்தை அறிந்து தர்ம வாழ்க்கை நடாத்தும் புருஷரின் உதவியை நாட வேண்டும். இதுவும் துர்லபமேயானால் தர்மவான் என்று தனக்குத் தெரியும் நபர் ஒருவரிடத்தில் சென்று தனது கடமையை அறிய முயல வேண்டும்.

தன்னை மேல் நிலைக்குக் கொண்டு செல்பவனும் கீழ் நிலைக்குத் தள்ளுபவனும் தானேயாவான. உண்மை இது, இதன் வழி நின்றால் நன்மை கிட்டும் என்று அறிந்துணர்ந்த பின்னும் எவனொருவன் மேல் நிலையை அடைய முயற்சிப்பதில்லையோ அவன் கீழ் நிலையை அடைகிறான். இதை பகவான் பகவத் கீதையில்,

"உத்தரேத் ஆத்மனுத்மானம் நாத்மானம் அவஸா தயேத்
ஆத்மைவ ஹ்யாத்மனோ பந்தராத்மைவ ரிபுராத்மன்
என்ற சுலோகத்தின் மூலம் தெளிவு படுத்துகிறார்.

வாழ்வில் செல்வந்தனாக வாழ்தல், ஆரோக்யவானாக ஜீவித்தல் போன்றவை, பிராரப்தத்தின் விளைவாக ஏற்படு கின்றன. ஆனால் சோகம், காமம், மோஹம் பயம் போன்ற வைகளைத் தவிர்ப்பதாலேயே சாத்யமாகிறது. இக் கருத் தையே பகவத் கீதையில்,

" அலோச்யானன் வஸோசத்வம் ப்ரக்ஞாவாதாம்ஸ்ச
பாஷஸே
கதா சூனகதாசூம்ச நானுஸோசந்தி பண்டிதா "
என்ற சுலோகத்தில் காண்கிறோம்.

உண்மை இன்பத்தை அடைவதே நமது குறிக்கோள் அவ்வின்பம் எத்தகையது? ஆக்கக் கலப்பற்ற தூய இன்பம் அத் தூய இன்பம் லௌகிகப் பொருள்களுக்கு அப்பாற் பட்டு எல்லையில்லா ஆதியந்தமில்லா சச்சிதானந்த சொரூ பமாய் விளங்கும் ஒரு பொருளிலிருந்தே தோன்ற வேண்டும்' அப் பரம்பொருளை அடைந்து தூய இன்பத்தில் என்றென் றும் திளைத்திருப்பதே நம்மவர் குறிக்கோளாகும்.

ஆகவே உண்மை இன்பத்தை அடைவதே நம் குறிக் கோளாயிருக்குமேயாகில், நாம் உண்மை அறிவைப் பெற்று விளங்க வேண்டும். ஞானத்தினாலேயே அக்ஞானம் அகற் றப் படுகிறது. உதாரணமாக மிகச் சிறந்த நெய்யால் தயா ரிக்கப் பெற்ற சுவைமிக்க இனிப்புப் பொருள்கள் ஏராள மாக ஒருதட்டில் நம் முன் வைக்கப்பட்டிருக்கின்றன என வைத்துக் கொள்வோம். நாம் அதை ஆவலுடன் உண்ணப் போகும் சமயம் நமது நண்பன் அவிடம் வந்து, "இதில் துளி விஷம் கலக்கப்பட்டிருக்கிறது" என்பானேயாகில், நாம் அதனை உண்ண விரும்பாதது மட்டுமல்ல, அவற்றைக் கண் காணாத இடத்தில் கொட்டிய பிறகே ஆறுதலடைவோம் இது போன்று இப்புலப் பொருள்களில் சொல்லொணாத



துயரங்களைத் தரக் கூடிய சக்தி மறைந்து இருக்கிறது. இவ ற்றிலிருந்து பெறப்படுவதாகக் கருதப்படும் இன்பம் முடி வில் துன்பமாகிறது. ஏற்ற அறிவு உதயமாகும்வரை இப் புலப் பொருள்கள் கவர்ச்சிகரமாகக் காட்சியளிக்கின்றன அவ்வறிவைப் பெற்றபின் அவற்றைத் தூர ஒதுக்கிவிட்டு உண்மை இன்பத்தை நாடிக் கண்டு கொள்ள முயல்வதே நம் கடமையாகும். இதையே பகவான் கீதையில்,

விஷயேந்திரிய சம்யோகாத்தத்ததக்ரே அம்ருதோபமம்
பரிணாமே விஷமிவ தத்சுகம் ராஜஸம் ஸ்மிருதம்
என்று மொழிகிறார்.

தேவர்களும் கூட சுவர்க்கத்தை அடைய மனிதப் பிறப் பெடுக்க வேண்டியிருக்கிறது என்று நாம் அறிகிறோம். இப் பேர்ப்பட்ட பெறற்கரிய பேற்றை அடைந்த நாம், சத்விஷ யத்தைப் பயின்று சன்மார்க்கத்தில் வாழ்ந்து நன்நிலையை அடைய முயலாமல், புலப் பொருள்களின் பின் சென்று வா ழ்வை வீணாக்குவோமேயாகில், நம்முடைய அறியாமையை என்னென்பது.

இறைவனை யடைவதே நமது குறிக்கோளாயிருக்க வேண் டும். ஏனெனில் பரமாத்மனே அழியாத ஆனந்தம், நிலைத்த சாந்தியின் நிலைக்களமாகும். எல்லாவற்றிலும் உயர்ந்ததும் அடையப்படவேண்டிய வஸ்து பரமாத்மனேயாகும். அதை அடைவதில்தான் மனித வாழ்வின் பூரணத்துவம் அமைந்து கிடக்கின்றது.

பகவான் கீதையில், "அனித்யம் அசுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வமாம்" என்று மனிதப் பிறப்பின் மேன்மை யை எடுத்துக் கூறி, மனித வாழ்வின் குறிக்கோளையும் எடுத் தியம்புகிறார்.

உண்மை இன்பத்தை நாடிச் செல்லும் மார்க்கம் இடுக் கண்கள் பல நிறைந்தது. அவற்றையெல்லாம் பொறுத்து அப்பாற் செல்லும் சக்தி மனிதனிடம் நிலவ வேண்டும். 'சமதுக்க அகக் க்ஷமி' யாக அவன் விளங்க வேண்டும்.

சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார். " Happiness presents itself before man, wearing the crown of sorrow on its head He who welcomes it must also welcome sorrow. சுவாமி சிவானந்தர் கூறுகின்றார். If pleasure increases in Arithmetical progression, pair increases in geometical progression.

இவ்வாறாக உண்மை இன்பத்தை, நிலையற்ற இன்பத்திலிருந்து பகுத்தறிந்து, அதை அடைய இடைவிடாது முயற்சிப்பதே மனிதராய்ப் பிறந்த நம்மவரின் கடமையாகும்.

## ஆத்மஜோதி அச்சக நன்கொடைகள்

| | | | |
|---|---|---|---|
| | சென்ற மாதக் கணக்கு | | 1905 — 50 |
| | திரு. ம. பொ. சிவநாதபிள்ளை | கண்டி | 18 — 00 |
| ,, | T. M. பார்த்தசாரதி | அரக்கோணம் | 2 — 00 |
| ,, | M. குப்புசாமி | கடவளை | 1 — 00 |
| ,, | செ. சின்னம்மா | ,, | 50 |
| ,, | ந. மாரி | ,, | 50 |
| | மொத்தம் | | 1927 — 50 |


## பிலவ வருஷ திருக்கணித பஞ்சாங்கம்

இது யாழ்ப்பாணம், மட்டுவில் திரு. சி. சுப்பிரமணிய ஐயர் F.R.A. S. அவர்களாற் கணிக்கப்பட்டது. மிக நுட்பமாகவும் சுத்தமாகவும் கணித்து வெளியிடப் பெற்று வருவது விலை ரூபா 1. 25 தேவையானோர்

சி. சுப்பிரமணிய ஐயர், தில்லைவாசம்,
மட்டுவில், சாவகச்சேரி, ( சிலோன் ) என்ற விலாசத்திற்கு
எழுதிப் பெற்றுக் கொள்க.




திருமுறைக்காட்சி-36.

# சிவன் தந்தது

(முத்து)

சீவனுக்கும் சிவனுக்கும் ஒருசுழியில் தான் வித்தியாசம். சீவன் சிவனாகாவாறு தடுப்பது அந்தச்சுழி, அதனை மும்மலங்கள் என்றும் மாயைத்திரை என்றும் கூறுவர். இந்தச் சீவன் யாருக்குச் சொந்தமானது? சிவனுக்கே தான் சொந்தமானது. அகங்காரத்தால் சீவன் சிவனை விட்டுப்பிரிந்து செல்கின்றது. பாற்கடலிலுள்ள மீன் தான் பாற்சமுத்திரத்தில் வசிப்பதை அறியாதவாறு போல சீவனும் திருவருட் சமுத்திரத்தில் வசித்தும் சிவத்தை உணர்வதில்லை.

சிவத்தின் கருணைப் பெருக்கை எம்மால் உணரமுடிவதில்லை. நாம் பிரிந்து வெகுதூரம் சென்றாலும் புறம் புறந்திரிந்து எம்மைத்தம் பக்கல் இழுத்துத்தம்மை உணர்த்திக் கொண்டே இருக்கிறது. இரும்பு தருமனத்தேனை ஈர்த்து ஈர்த்து என்புருக்கிக் கரும்புதருசுவை யெனக்குக் காட்டும் கழலிணைகளையுடையவன் எம்பெருமான். சீவனின்வினை அறுந்து சிவமாவதற்குச் சீவனுக்குத் தனு,கரண, புவன, போகங்களை அளித்துள்ளான் இறைவன். அதனைச் சீவர்கள் உணர்வதில்லை.

இவ்வுலக வாழ்க்கையிலே சீவனைப்புவிமாயையில் வாட்டும் பொருட்கள்சிலவுள, அவை:- மண், பெண், பொன் என்பன. இவற்றுள் எவற்றையாவது இச் சீவன் பிறக்கும் பொழுது கொண்டுவந்ததோ என்றால் இல்லை என்றே பதில் கூறவேண்டும். எந்தக் குழந்தையாவது பிறக்கும்போது ஒரு தங்க அரைஞாண் கொடியோடாவது அன்றி ஒரு காசுமாலையைக் கழுத்தில் போட்டுக் கொண்டாவது பிறந்ததை நாம் அறியோம். இலட்சக் கணக்காய் தேடுகிறான் மனிதன்.

கோடீஸ்வரர்கள் எத்தனையோபேரைப் பார்த்துள்ளோம். கோடீஸ்வரன் கடைசி காலத்திலே ஒரு செம்புச் சல்லியாவது கொண்டு செல்லமுடிகின்றதா? இல்லை என்றே அனுபவத்தில் உணர்ந்துள்ளோம்.

"தவத்தளவேயாகுமாம் தான்பெற்ற செல்வம்" என்பது ஒளவைவாக்கு. முற்பிறப்பிற் செய்த புண்ணியத்திற் கேற்கப் பணப்பெருக்கில் வாழுகின்றான். அப்பணத்தைக் கொண்டு புண்ணியத்தையே மேலும் மேலும் சம்பாதிப்பதை விட்டு பாவ மூட்டையைப் பெருக்கிக் கொள்வது மனித சுபாவ மாகி விட்டது. மனிதன், உடன் வாழ்பவர்கள் எத்தனையோ பேரைப் பார்த்திருக்கின்றான். அவனுக்குப் பல குழந்தைகள் பிறந்துள்ளன. எந்த ஒரு குழந்தையாவது பிறக்கும்போது ஏதாவதொன்றைக் கொண்டு வந்ததோ என்றால், இல்லை என்பதை மறுக்க முடியாது. உடன் வாழ்ந்த கோடீஸ்வரன் ஏதாவதொன்றைக் கொண்டு சென்றானோ? என்றால் அதுவும் இல்லை என்பதைப் பல அநுபவங்களுக்கூடே அறிந்துள்ளான்.

பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை; பிறந்துமண்மே
லிறக்கும் பொழுது கொடுபோவதில்லை;

இதனை நன்கு அறிந்திருந்தும் கொடுக்கும் பண்பு இவனிடத்து உண்டாக வில்லை. மக்கள் எல்லாம் மரிக்கக் கண்டும் தான்நூறாண்டல்லநித்திய புருஷனாக வாழ்வதாகவே எண்ணுகின்றான். பாடு பட்டுத்தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக் கெட்ட மனிதரைப் பார்த்திருந்தும் தருமசிந்தனை உண்டாகவில்லை,

ஒரு குடும்பத்தில் ஐந்து பிள்ளைகள். ஒருவன் கோடீசுவரனாக வாழ்கின்றான். நால்வரும் அன்றாட வாழ்க்கைக்கே கஷ்டப் படுகின்றனர். காரணம் என்ன? ஒரேதாய் தந்தையரின் குழந்தைகள் ஐவரும் ஒரேமாதிரி யல்லவா வாழவேண்டும். இந்த இடத்திலே தான் ஒருண்மையை மனிதன் விளங்கிக் கொள்ளக் கடமைப் பட்டுள்ளான். பூர்வ புண்ணிய பாவ பலனே, யாம் இப்பிறவியில் அநுபவிப்பதாகும். "தவத்தளவே



யாகுமாம் தான் பெற்ற செல்வம்" என்பதை உணர்ந்து கொண்டவன் எங்ஙனம் மேலும் மேலும் தவத்தைச் செய்யா திருக்க முடியும். எமது புண்ணிய பாவப்பயனை அளந்து நுகரவைப்பவன் ஆண்டவன். சென்றகால வினைப்பயனால் இச்செல்வம், மேலும் மேலும் நல்வினைகளைச் செய்து நல்ல வனாக ஆகுமாறு இறைவனால் கொடுக்கப் பெற்றது இச் செல்வம். பிறக்கும் பொழுது கொண்டுவந்தது மல்ல; இறக்கும் பொழுது கொண்டுபோவது மல்ல. இடைநடுவில் வந்தது. தானாக வந்ததல்ல; சிவன்தந்தது. சிவன்தந்த பணத்தைச் சிவகைங்கரியத்திற்கே செலவு செய்யக் கடமைப் பட்டுள்ளோம். நம்பிக்கைக்காகத் தரப்பட்ட செல்வம். அதனால் சிவபுண்ணியத்தைத் தேடிக்கொள்ள வேண்டும்.

நாம் எத்தனை எத்தனை பிறவிகள் எடுத்தோமோ அத்தனைக்கும் இதுபொருத்தம். வினைதீரும் வரை பிறப்பு உண்டு. பிறப்பு உண்டேல் இறப்பு முண்டு. இடைநடுவில் வந்த செல்வம் அவன் செய்த புண்ணிய பாவத்தினள வினதாகும். செல்வம் சடப்பொருளாதலின் தானாகச் செல்லமாட்டாது. கன்மங்கொண்டு செலுத்துவது. இறைவன் எமது புண்ணியத்திற்கேற்கத் தந்த செல்வமாதலின் அதனை உடனேயே

"என்னுறு மொன்றுதங் கையுறப் பெற்றக்கால்
பின்னுவ தென்று பிடித்திரா — முன்னே
கொடுத்தா ருய்ப்போவர்."

என்பதற்கேற்பக் கொடுக்க வேண்டும். அடுத்தகணம் இருப்போமென்பது நிச்சயமில்லையே! கொடுப்பதை இடதுகையால் எடுத்தால் இடதுகையாலேயே கொடுத்துவிட வேண்டும் என்பார்கள். வலதுகைக்கு மாற்றுவதற் கிடையிலேயே மனம் மாறிவிடும். தினந்தோறும் விடிந்து எழுந்ததும் புதிய நாள் எனக் குதூகலிக்கின்றோம். நாள் என்பது எமது ஆயுளை அறுக்கும் வாள் என்பதை நாம் உணர்வதில்லை.

"நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்
தொன்றின வொன்றின வல்லே — செயிற் செய்க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று." —என்பது பெரியார் வாக்கு.

இறைவன்தந்த அறிவுபெரியது, அதைக்கொண்டே மனிதன் செல்வஞ்சேகரித்தான். ஆனால் செல்வம் பெற்றதாற் பெறும் பயனை அடைவதற்கு அவ்வறிவை உபயோகிக்கத் தவறிவிட்டான். தந்த அறிவை உபயோகிக்கத் தெரியாதவர்கள் கீழ்மக்கள் ஆகின்றார்கள்.

கொடு, கொடு, கொடுத்துக் கொண்டே இரு என்பது சுவாமி சிவானந்தருடைய வாக்காகும். கொடையினாலே தான் தியாகம் உண்டாகின்றது. மனிதன் சிவன் தந்தது என்று அறியாமல் தான் உழைத்த தாகக்கருதி விடுகிறான். அதனாலேதான் நான், எனது என்ற அகங்கார மமகாரங்களுக்காளாகி கொடுக்கறியாதிருக்கின்றான். இக்கருத்துக்கள் அத்தனையையு மடக்கிய பட்டினத்தார் பாடலைப் பாருங்கள்.

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை; பிறந்துமண்மே
லிறக்கும் பொழுது கொடுபோவ தில்லை; யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்தந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே

பொருள்:— அடியேன் பூமியில் பிறக்குங் காலத்தும் கொண்டு வந்ததாகிய பொருள் வேறொன்றுங் கிடையாது; பூமியில் தோன்றி சாங்காலத்திலும் கொண்டு போகும் பொருள் இல்லையாம். இப்பிறப்பிற்கும் இறப்பிற்கும் நடுவணதாகிய வாழ்க்கைகள் தோன்றியதாக எண்ணப்படும் இந்தநிலையிலாச் செல்வம், எல்லாம்வல்லவனாகிய சிவமூர்த்தி ஆன்மாக்களின் கர்மங்களுக்கீடாகக் கொடுக்கப்பட்ட தென்றெண்ணி இரப்பார்க்குக் கொடுக்க அறியாது, வீணாகஉயிரைவிடும் கீழ்மக்களுக்கு நான் ஏது சொல்லுவேன் திருக்கச்சியைத் திருக்கோயிலாக்கொண்டெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே;

பணத்தை மட்டும் சேர்த்து விடு; உலகம் முழுவதும் சேர்ந்து கொண்டு உன்னை ஒரு பண்பாளன் என்று கூறத்தயங்காது.

— பெர்னார்ட்ஷா



# சுவாமி அபேதானந்த மஹராஜ் அவர்களுக்கும் ஒரு பக்தருக்கும் இடையே நடந்த சம்பாஷணை

**பக்தர்;-** அபேத ஆசிரமத்தின் இலட்சியம் என்ன?

**சுவாமிகள்:-** மக்களுக்கு கடவுள் நம்பிக்கை ஏற்பட்டு அது உறுதி பெற வேண்டும். இது பெற்றுவிட்டால் உலகில் அமைதியை நிலை நாட்ட முடியும்.

**பக்தர்:-** இந்துமத தத்துவங்களை மக்களிடையே பரப்புவதுதான் தங்களுடைய முக்கிய வேலைத் திட்டமா?

**சுவாமிகள்:-** எந்த மதத்தையும் தனிப்பட்ட முறையில் பிரசாரம் செய்வது நோக்கமல்ல. எல்லா மதத்தினருக்கும் இந்த ஆசிரமத்தில் இடம் உண்டு.

**பக்தர்:-** இங்கே நடந்துவரும் நாம ஜப யக்ஞம் என்ற கர்மத்தினால் என்ன பிரயோசனம்?

**சுவாமிகள்:-** நாம, ஜப. பஜனை, ஆராதனை இவற்றில் இருந்து ஓசை அலைகள் பொங்கிப் பரவிய இடம் அனைத்தும் பரிசுத்தமாகும். கேட்டவர் மனதில் சாந்தி ஏற்படும். நாம ஜப ஒலிகளிலே பரவக் கூடிய அணுக்கள், தீய எண்ணங்களால் பரவிய அணுக்கள் முழுவதையும் அழித்து விடுகின்றன. அது எங்ஙனம் என்ற கேள்வி எழலாம். இறைவன் நாம ஜபம் செய்யும் பொழுது மனம் விகாரமடையாது. கடவுள் காம வசப்பட்டவர் அல்ல. அது மட்டுமல்ல. திவ்ய நாமத்தின் அர்த்தத்தை உணர்ந்து பாடும் பொழுது பக்தர்களுடைய முகத்தில் தெய்வீகம் தெளிவாகக் காணப்படுகிறது. "யத் பாவம் தத் பவதி" "Just as you think you become" என்றெல்லாம் கூறுவதுண்டு. ஆக கடவுள் நாமத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லும்பொழுது மனம் அமைதி பெறுகிறது.

**பக்தர்;-** மதம் என்றால் என்ன என்று விளக்குவீர்களா?

சுவாமிகள்:- கடவுளை அடைவதற்கு ஏற்ற முயற்சி மதம் எனப் பெயர் பெறுகிறது.

பக்தர்,- அப்படியானால் ஏன் அநேக மதங்கள் தோன்றியிருக்கின்றன?

சுவாமிகள்:- ஒவ்வொரு ஆசாரியரும் காலம், இடம் இவற்றிற்கேற்ப தத்தம் கொள்கைகளையும், அபிப்பிராயங்களையும் வெளியிட்டிருக்கின்றார்கள். எனினும் எல்லா மதங்களின் குறிக்கோளும் ஒன்றுதான். எல்லா மதஸ்தர்களும் மனச் சாந்தி அடையத்தான் முயன்று வருகிறார்கள். உலக விஷயங்களில் ஞானம், விஞ்ஞானத்தில் அடையும் தெளிவு முதலியன மனதிற்கு அமைதி நல்குவதில்லை. ஒவ்வொரு மனிதனும் தன் மனதை மாசு நீக்கி சாந்தி அடைந்ததாய் வைத்துக் கொண்டால்தான் உலக அமைதி ஏற்படக்கூடும். ஆதலால் ஒவ்வொரு மனிதனும் தனக்கு சாந்தி கிட்டுவதற்கு வழி தேடி முயற்சி பண்ண வேண்டும்.

பக்தர்:- இக் காலத்தில் காணப்படும் மதப் பூசல்களும் சண்டை சச்சரவுகளும் மனத் தாங்கல்களும் அறவே நீங்க நீங்கள் என்ன முயற்சி செய்கின்றீர்கள்?

சுவாமிகள்;- பக்த சிரோன்மணிகளான சான்றோர்களிடத்தில் மதப் பூசல்கள் தலையிடுவதில்லை. மக்கள் மனதில் கடவுள் நம்பிக்கை அதிகம் உறுதி பெறும் அளவு சண்டைகள் குறையக்கூடும்.

பக்தர்:- கடவுள் நம்பிக்கை உள்ளவர்களிடத்தில் அல்லவா மதச் சண்டைகள் உண்டாகின்றன?

சுவாமிகள்;- கடவுள் ஒருவரே. மானிடன் தனது அந்தக் கரணத்தை பரிசுத்தப் படுத்தியதால் உண்டாகும் திவ்ய பாவனைதான் கடவுள். இந்தப் பாவனையின் மூலம் மனிதன் பேரின்பம் அடைகிறான். "ஏகம் ஸத் விப்ரா பகுதா வதந்தி" இந்த மகா வாக்கியத்தை உன்னிப்பாகப் பாருங்கள். ஸத் ஒன்றே. அதையே சான்றோர்கள் பல விதமாகப் பாடினார்கள். இயேசு இறைவனுடைய செல்வன். அல்லா இறை வடிவமேயாகும். நபி அல்லாவுடைய பிரசுர கர்த்தர் ஆவார்.



வேதாந்திகள் ஈசுவரனை பிரம்மம் என்கிறார்கள். மீமாம்ச வகுப்பினர் கர்மத்தை தெய்வமாகக்கருதுகிறார்கள். இயேசு, அல்லா, கர்மம், பிரும்மம் எல்லாம் அந்த ஒரே பொருள் தான். இந்த ஒரே பொருளைத்தான் கிறிஸ்தவர்கள் இயேசு என்றும், முஸ்லீம்கள் அல்லா என்றும், வேதாந்திகள் பிரும்மம் என்றும், வைணவர்கள் விஷ்ணு என்றும், ஜைனர்கள் அருஹன் என்றும் மீமாம்சர்கள் கர்மம் என்றும் கூறுகிறார்கள்.

பக்தர்:- இந்து மதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கடவுள்கள் இருக்கிறார்களே?

சுவாமிகள்:- இந்துக்கள் அன்பு மிகுதியால் அவரவருடைய மனப்பாங்கிற்கேற்ப பெயர்களைச் சூட்டி மகிழ்கிறார்கள். கடவுள் ஒருவரேயானாலும், பல பெயர்கள் உள்ளவர், இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், மற்ற மதத்தினர்கள் ஆகிய எல்லோரும் வணங்கி வரும் கடவுள் ஒருவரே.

பக்தர்:: இந்துக்கள் போற்றிவரும் கடவுளுக்கு அந்நியோன்யம், பந்தம் கற்பிக்கிறார்களே? சிலர் இறைவனுக்கு ஒரு குடும்பத்தை ஏற்படுத்தி அக் குடும்பத்தையே வணங்குகிறார்களே?

சுவாமிகள்:- மானிடன் குடும்ப வாழ்க்கையிலேயே பழக்கப்பட்டவன். ஆகையால் அவன் இறைவனையும் ஒரு குடும்பியாக எண்ணி வணங்குகிறான். கீதையில் பகவான் கூறுகிறார் "பிதாஹம் அஸ்ய ஜகதோ மாதா, தாதா, பிதாமஹா வேத்யம் பவித்ரம், ஓங்காரம், ரிக் சாம, யஜுரேவச." இதன் பொருள் உலகத்தினுடைய, அம்மை, அப்பன், பாட்டன், அறியக் கூடிய வஸ்து, பரிசுத்தமான வஸ்து, எல்லாவற்றிற்கும் நடுநாயகமாகிய ஓங்கார ரூபமும் ரிக் யஜுர் சாம, அதர்வண வேதங்களும் எல்லாம் நானே ஆவேன்.

பக்தர்:- கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களைப் பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

சுவாமிகள்;- அவர்கள் கர்ம வீரர்களாக முடியாது. உலக நன்மையில் நாட்டமுள்ளோரார் அன்றாடம் பக்தி சிரத்

தையுடன் பூஜை நாம ஜபம் செய்தல் அவசியம். பிரார்த்தனை செய்வதால் எண்ணங்கள் கைகூடும். இறைவனிடத்து அசையாத உறுதியான நம்பிக்கை வைத்தல் ஒவ்வொருவனுக்கும் இன்றியமையாதது. எல்லா மதங்களும் இத் தத்துவத்தையே பறைசாற்றுகிறது. மதமில்லாத மானிடர் உலகத்திற்கு ஒரு பெரும் சுமையாகவும், சமூகத்திற்கு ஆபத்தாகவும் இருப்பர். நாம் கண்டு வரும் பதை பதைப்புக்கும் கூச்சலுக்கும், பயத்திற்கும் காரணம் மக்களிடையே கடவுள் நம்பிக்கை உறுதிப் படாததே. எந்த மானிடனுக்கும் நான் என்ற வார்த்தையை உபயோகிக்க அதிகாரம் இல்லை. ஈசுவரன், நான் என்ற இரு வார்த்தைகளும் இறைவனையே குறிக்கும். இறைவனின் சக்திக்கு முன்னால் நான் என்று கூறுவது அபசாரமாகும். நான், எனக்கு என்னுடையது என்ற இந்த வார்த்தைகள் எல்லாம் நம் பேச்சில் தவிர்த்து பழகிவந்தால் நம் மனதை உள்நோக்கி திருப்புவதற்கும் சுலபமாக இருக்கும். அப்பொழுது சொல்லுதற்கு அரிய பேரின்பம் நமக்குக் கிட்டும். இங்ஙனம் மனிதன் தன்னை பண்படுத்தி வந்தால் அவனிடத்து அகங்காரம் சிறிது சிறிதாகத் தேயும்.

பக்தர்:- சில கோவில்களில் விக்கிரகத்தினிடத்தில் கண்ணாடி வைக்கிறார்களே? அதன் நோக்கம் என்ன?

சுவாமிகள்:- விக்கிரகங்களுக்குள் மிக மேலானது கண்ணாடி. அது எல்லாவற்றையும் கிரகித்து பிரதிபலிக்கிறதல்லவா? மன அமைதிக்கு உதவியாக இருப்பது விக்கிரகமாகும். உடலின் வேறுபாடுகளை அனுசரித்து கோயில்கள் கட்டப் படுகின்றன. உடம்பு ஆலயமாகிறது. கலாசாலையிலே ஏழை பணக்காரர்கள் என்ற பேதமின்றி எல்லோரும் வருவது போன்று கோவில்களிலும் பேதமின்றி அவர்கள் இடம் பெறுகின்றனர். அபேத ஆசிரமத்தின் நடைமுறையில்கடைப் பிடிக்கின்ற முக்கிய விஷயம் சர்வமத சமரசமும் அவற்றின் முன்னேற்றமுமாகும்.



பக்தர்:- தங்கள் கருத்துப்படி கோவிலுக்குள் மக்கள் நுழைவதில் கட்டுப்பாடு ஏற்படுத்துதல் சரியாமா?

சுவாமிகள்:-- மானசிக சம்ஸ்காரம் கோவில் மூலமாகக் கிட்டும். குற்றம் காண்பவர்க்கு அங்கு இடமில்லை. அந்த ரகத்தினரை கோவிலுள் அனுமதிக்கலாகாது. கோவிலின் சூழ்நிலை நாமஜபம், பஜனை, பூஜை நடத்தி பரிசுத்தம் பெற்றது. அதை மாசு அடைவதற்குக் காரணமாக இருப்போரை கோவிலில் நுழைய விடுவது தவறு. இதைத்தான் இந்து மதத்தினர் கடைப்பிடித்து வந்தனர் போலும்.


## திருமுறைக் காட்சி

ஆத்மஜோதியில் தொடர்பாக மேற்படி தலைப்பின் கீழ் வெளிவந்த 23 கட்டுரைகள் முதலாம் பகுதியாக வெளிவந்துள்ளன.

நால்வர் மத்தியிலே!
நடராசர் திருவுருவம், மூவர்ணப் படத்துடன்
அருள் வடிவாய் விளங்குகின்றது.
விலை 1 ரூபா 50 சதம்-. தபாற் செலவு 35 சதம்.
இந்தியாவில் உள்ள அன்பர்கள்
R. வீரசம்பு, சம்பு இன்டஸ்றீஸ், சேலம் 2.
என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.
இந்தியாவில் விலை 1 ரூபா 50 நயா பைசா
புக் போஸ்ட்டில் சார்ச்சு 20 நயா பைசா.
பதிவுத் தபால் மூலம் 70 நயா பைசா.
ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டியா, சிலோன்.






# யார் செயல்?

*******

"கனியூரான்"

நீண்டு பரந்திட்ட வானத்திலே - ஒளிக்
கோட்டை வரைந்தது யார்? - மனம்
வீங்கித் துடித்திடும் நேரத்திலே - மணி
ஓசையை ஒளிப்பது யார்?

கொஞ்சும் மழலையின் குரலினிலே - பெரும்
குதலையைத் தந்தது யார்? - மண்ணில்
நெஞ்சம் விம்மிடும் நேரத்திலே - ஒரு
நித்திரை தந்தது யார்?

கோடி மலர்களை வானத்தே மேவியே
கொட்டி வைத்தவர் யார்? - மனம்
கோடிக் கனவினைக் காண்பதற்கே - அந்தக்
கோலத்தைக் குவித்தது யார்?

தேடிவரும் இன்பம் கூடிடவே - வழி
வகுத்துத் தந்தது யார்?
நாடி வரும் கன்னல் தேனினைப் போல்
இசைக் கோயிலைக் கண்டது யார்?

காலமெலாம் தமிழ் காவியம் பாடிட - அரும்
காவியம் சமைத்தது யார்? - அருள்
ஞாலமெலாம் உய்யும் ஞானத்தை மண்ணில்
நெகிழ்ந்திட வைத்தது யார்?

மாயையைப் போக்கிடும் மாண்பினை - கீதை
வடிவினில் அளித்தது யார்? - நிதம்
வாழ்வையே போற்றிடும் அருளின் நாமத்தை
வழங்கிக் காப்பது யார்?

# ரிஷிகேசம் தெய்வீக வாழ்க்கைச் சங்கம்
## வெள்ளிவிழா நாமலிகித ஜெபம்
### மார்ச் மாதம் முடிய உள்ள கணக்குவிபரம்

| | |
|---|---|
| சென்ற மாதக் கணக்கு | 18116582 |
| ஹவாக் கட்டளை | 4600 |
| உசன் | 11724 |
| தருமபுரம் | 40057 |
| சங்குவேலி | 3870 |
| கந்தர்மடம் | 30120 |
| உடுவில் | 4510 |
| சண்டிலிப்பாய் | 18480 |
| நாகெனித் தோட்டம் | 8320 |
| கட்டுவன் | 27000 |
| கொழும்பு | 8800 |
| காங்கேசன்துறை | 13608 |
| பதுளை | 26400 |
| கல்லெல்ல | 6720 |
| சாவகச்சேரி | 4920 |
| மத்துகமப்பட்டினம் | 113751 |
| மதுகெ தறத் தோட்டம் | 22151 |
| சென் ஜோட்ஜ், தோட்டம் | 18006 |
| கீக்கிஞகந்த, தோட்டம் | 4000 |
| மத்துகமத் ,, | 10640 |
| இலப்பந்துறப் பட்டினம் | 3459 |
| பாந்திய தோட்டம் | 5720 |
| கல்வயல் | 1525 |
| ஊரெழு | 8440 |
| மிருசுவில் | 6880 |
| தெல்லிப்பளை | 9954 |
| உருத்திபுரம் | 102319 |
| இராமநாதபுரம் | 10080 |
| கண்டி | 2400 |
| குஞ்சுப்பரந்தன் | 2816 |
| கிளிநொச்சி | 14664 |
| சுதுமலை | 9660 |
| வட்டக்கச்சி | 50344 |
| ஜெயந்திநகர் | 48360 |
| நல்லூர் | 30857 |
| மதுரை | 6080 |
| டம்பாரைத்தோட்டம் | 12000 |
| இலப்பந்துற தோட்டம் | 4480 |
| மூதூர் | 54288 |
| ஸ்ரீகந்துற | 9375 |
| கழவாஞ்சிக்குடி | 4934 |
| டெனிஸ்ரன் தோட்டம் | 2000 |
| பன்விலதோட்டம் | 4000 |
| உடுப்பிட்டி | 129360 |
| பருத்திதுறை | 12126 |
| மட்டக்களப்பு | 10088 |
| பள்ளகொட தோட்டம் | 4240 |
| மானிப்பாய் | 2400 |
| மஸ்கெலியா | 21867 |
| மொத்தம் | 19078975 |

Registered at the G. P. O. as a News Paper M. L. 59-300


## சர்க்கரை கொல்லி சூரணம்

(DIABETES) என்னும் நீரழிவு. மதுமேகம் சர்க்கரை வியாதிக்கு மிகச் சிறந்த சூரணம்.

நீரில்வருகிற சர்க்கரையைப் போக்கி புளிப்புச்சத்தை குறைத்து கொழுப்பு ரஸனேகள் போவதைத் தடுத்து சப்ததாதுக்களின் தித்திப்பைக் குறைக்கும் அற்புதஔடதம் யாவும் மூலிகையினுல் சித்தர்களின் அனுபவ முறைப்படி தயாரிக்கப்பட்டது.

தபால் செலவு உட்பட டின் ஒன்று 6 ரூ 75 ச.

இலங்கையில் கிடைக்குமிடம்:

**ஆத்ம ஜோதி நிலையம், நாவலப்பிட்டி.**

இந்தியாவில் கிடைக்கும் இடம்:

**சம்பு இன்டஸ்ரீஸ் சேலம் 2(S. I.)**

மலாயாவில் கிடைக்குமிடம்:-

**மு. கணபதி அன் கம்பெனி**

66, பெல்பீல்ட் ஸ்ரீட் ஈப்போ.


## சந்தா நேயர்களுக்கு

ஜோதி எடுக்கும் சந்தா நேயர்கள் அனைவரும் தமது சந்தாப் பணங்களை அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். பணம் அனுப்பும்போதும் விலாச மாற்றம் செய்யும்போதும் சந்தா இலக்கத்தைத் தவறாது குறிப்பிட வேண்டுகின்றோம்.

இந்தியாவில் உள்ள அன்பர்கள் வழக்கம் போல

R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ், சேலம்-2.

என்ற விலாசத்திற்கு அனுப்பிவைப்பதோடு இவ்விடமும் அறியத்தருக.

**ஆத்ம ஜோதி நிலையம், நாவலப்பிட்டி.**

(சிலோன்)

Printed & Published by Mr. N. Muthiah, Athmajothi Nilayam, Nawalapitiya. at ATHMAJOTHI PRESS, NAWALAPITIYA. (Ceylon) 13-4-61.